மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.67/2021</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 24ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கெர்சோம் ஜேக்கப் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>24.09.2025 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் ஆமாம். எந்த முகவரிக்கு அந்த அழைப்பானை எனக்கு சார்பானது என்றால் அழைப்பாணை கண்டுள்ள முகவரிக்கு தான் சார்வானது. நான் மேற்படி சிஎஸ்ஐ சர்ச்சில் பாதராக உள்ளேன். நான் மேற்படி சர்ச்சில் பாதராக உள்ளேன் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ள பதிவேட்டிலேயே அந்த விவரங்கள் கண்டுள்ளது.

2. நான் என்னுடைய மேல் அதிகாரிகளிடம் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அனுமதி வாங்கினேனா என்றால் நான் தான் அந்த சச்சின் சேர்மன் அதனால் அனுமதி வாங்க அவசியமில்லை. நான் தான் மேற்படி சர்ச்சின் சேர்மன் என்பதை காட்டக் கூடிய ஆவணங்களை

தாக்கல் செய்து உள்ளேனா என்றால் நான் ஏற்கனவே கையெழுத்து போட்டு கொடுத்துள்ள ஆவணத்தில் நான் சேர்மன் என்பது கண்டுள்ளது. எனது தகப்பனார் பெயர் செல்வராஜ். ஜோன் எம்லிராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் அது எனக்கு தெரியாது. எங்களுடைய ஆவணங்களில் மேற்படியாரின் தகப்பனார் பெயர் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

3. ஆர்.ராஜன் என்று சொல்லப்பட்டுள்ளது. எந்த தேதியில் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் பிப்ரவரி 15, 1984 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் நான் சிஎஸ்ஐ சர்ச்சின் சேர்மன் ஆக இருந்தேனா என்றால் இல்லை. 15.02.1984 தேதியில் மேற்படி சிஎஸ்ஐ சர்ச்சின் சேர்மன் ஆக யார் இருந்தார்கள் என்ற விபரம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால் ஆமாம் அவர் பெயர் ஜேக்கப் பெல்லி. 15.02.1984 தேதியில் பதிவு செய்யப்பட்ட திருமண பதிவேட்டின் நகல் கேட்டு வாதிகள் என்னிடம் விண்ணப்பம் ஏதேனும் செய்திருந்தார்களா என்றால் ஆமாம்.

4. நீதிமன்றத்தில் அந்த விண்ணப்பத்தின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை 15.02 1984 தேதியிட்ட திருமண பதிவேட்டின் விண்ணப்பத்தை நகல் கேட்டு மூன்றாம் நபர்கள் விண்ணப்பம் செய்தார்கள் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள பதிவேட்டில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எங்கள் சர்ச்சில் ஒரே பெயர் கொண்ட பல நபர்கள் இருப்பார்கள் என்றால் ஆமாம். அவர்களது பெற்றோர் பெயர்கள் பல சமயத்தில் வேறு பெயர்கள் சில சமயத்தில் ஒன்றாக இருக்கும் என்றால் ஆமாம். நான்

வழங்கிய ஆவணத்தில் சாமிதுரை என்பவரின் விலாசம் ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் காங்கேயம் என்று எழுதப்பட்டுள்ளது.

5. தகப்பனார் பெயர் எழுதப்பட்டுள்ளது முழு விலாசம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் பதிவேட்டில் சாமி துரையின் தகப்பனார் பெயர் கனகராஜ் என்று எழுதப்பட்டுள்ளது. சாமிதுரை என்பவரின் பெயர் விலாசம் ஆகியவை மேற்படி ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் பெயர் மட்டும் இணைக்கப்பட்டுள்ளது விலாசத்தில் காங்கேயம் என்று மட்டும் கண்டுள்ளது. நான் வாதிகள் கேட்டுக் கொண்டதற்காக அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

(3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது)

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.24 18:23:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்